https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

17th SEPTEMBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 45




# ஜனவரியில் அமைச்சரவை மாற்றம்:

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு அடுத்த வருடம் ஜனவரியில் முழுமையான அமைச்சரவை மற்றம் ஒன்று இடம்பெறவுள்ளது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

02

## ஜனவரியில் மின் கட்டணம் அதிகரிப்பு?




அடுத்த வருடம் ஜனவரி மாதமளவில் மின் கட்டணம் மீண்டும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரியில் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு ஏதுவாக மின்கட்டணத்தை அதிகரிப்பதன் அவசியத்தை விளக்கி இந்த வருடம் நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக

02



## செயலாளர் பதவிக்கு கடும் போட்டி

ஸ்ரீலங்கா சுதந்திர கட் சியின் செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பதவியைக் கைப்பற்றுவதற்காக அந்தக் கட்சியில் இருக்கின்ற சீனியர்கள் மத்தியில் கடும் போட்டி நிலவுவதாக கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருந்தும்,தான் கட்சியை விட்டுப் போகப்போவதில்லை என்றும் செயலாளர் பதவியை மீண்டும் கைப்பற்றுவதற்காக தொடர்ந்து போராடப் போவதாகவும் தயாசிறி கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நீதிமன்றில் வழக்கு ஒன்றையும் தாக்கல் செய்துள்ளார்.

தயாசிறிக்கு ஆதரவாக கட்சிக்குள் ஓர் அணி கிளம்பியுள்ளது.அதற்கு திலங்க சுமதிபால தலைமை தாங்குகிறார்.

செயலாளர் பதவியை மீண்டும் தயாசிறிக்கு பெற்றுக்கொடுக்கும் வரை போராட்டம் ஓயாது என்று அவர்கள் கூறியுள்ளனர்.






## வீட்டுத் தேவைக்காக பாவிக்கப்படும் 2000 அரச வாகனங்கள்

அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள அரச உத்தியோகபூர்வ வாகனங்களில் 2000 வாகனங்கள் அவர்களின் குடும்பங்களின் சொந்தக் தேவைகளுக்கே பயன்படுத்தப்படுகின்றன என்று அரச புலனாய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

பாடசாலைகளுக்கு மாணவர்களை கொண்டு செல்லுதல்,கடைகளுக்குச் செல்லுதல் உள்ளி ட்ட அனைத்துவிதமான சொந்தத் தேவைகளுக்கே இவை பயன்படுத்தப்படுகின்றன என்கிறது அந்த அறிக்கை.

இதனால் அரசுக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது.இந்த அறிக்கையைத் தொடர்ந்து அரசு இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது என்று அறிய முடிகிறது.






புதுசுடர்
www.puthusudar.lk
2023 SEPTEMBER 17 - SUNDAY

# இந்தக் குழுவும் ஏமாற்று நாடகமே...!!!

எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு எல்லா கட்சிகளும் இப்போதே பிரசார பணிகளைத் தொடங்கிவிட்டன.

அதிலும்,மொட்டு கட்சி கடுமையாக இறங்கி நிற்கிறது. ஊர் ஊராக அலைகிறது.தனது அரசு விட்ட பிழைகளை மூடி மறைத்து –மறக்கச் செய்து எப்படியாவது மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும்– கட்சியைப் பலப்படுத்திவிட வேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றன.

இந்த நிலையில்தான் சணல்– 4 அவர்களின் தலையில் இடியை இறக்கியுள்ளது.ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக

அது ஒளிபரப்பிய ஆவணம்தாம் அந்த இடி.

பிள்ளையானின் சகாவான அசாத் மௌலானாவின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அந்த ஆவணத்தின்படி அத்தாக்குதலின் சூத்திரதாரிகள் பிள்ளையானும் புலனாய்வு பிரதானி சுரேஷ் சாலேயும் ஆவர்.

கோத்தபே ராஜபக்சவை ஜனாதிபதியாக்குவதற்காகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்பதுதான் அந்த ஆவணத்தின் கருத்து.

சம்பந்தப்பட்ட எல்லோரும் இதை மறுத்துள்ளனர்.பாதுகாப்பு அமைச்சும் மறுத்துள்ளது.அரசு இதற்கு பதில் வழங்கப்போவதில்லை என்று கூறியுள்ளது.

இருந்தாலும்,இது பலரை ஆட்டங்காணச் செய்துள்ளது என்பதை மறுக்க முடியாது.இதை எவர் மறுத்தாலும்,மக்கள் இது தொடர்பில் ஒரே நிலைப்பாட்டில் இருக்கிறார்கள்.

ஈஸ்டர் தாக்குதல் நடந்தபோதே பேசப்பட்டது அப்போது எதிர்க்கட்சியாக இருந்த மொட்டு தரப்பு ஆட்சியைப் பிடிப்பதற்காகவே இதைச் செய்தது என்று.

அதேபோல் மொட்டு ஆட்சியைப் பிடித்து கோத்தா ஜனாதிபதியானார். ஜனாதிபதியானதும் ஈஸ்டர் தாக்குதல்

தொடர்பான விசாரணை நிறுத்தப்பட்டது.விசாரணை அதிகாரிகள் இடமாற்றப்பட்டார்கள்.இது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு கோத்தாவை பதவியில் இருந்து விரட்டுவதற்காக மக்கள் வீதிக்கு இறங்கியபோது அந்த மக்கள் வெளிப்படையாகக் கூறினார்கள் ஈஸ்டர் தாக்குதலை நடத்தியது கோத்தா தரப்புதான்.என்று. நாங்கள் ஏமாந்துபோய்–அப்பாவி முஸ்லிம்களை பகைத்துக்கொண்டு கோத்தாவுக்கு வாக்களித்துவிட்டோம் என்றார்கள்.

கோத்தா விரட்டப்பட்டபோது சொன்னார்கள் ""அப்பாவி மக்களை குண்டு வைத்து கொலை செய்த அந்த பாவம்தான் கோத்தாவை இப்படி விரட்டியுள்ளது என்று.

மொத்தத்தில் இந்தத் தாக்குதலின் சூத்திரதாரி யார் என்று மக்கள் என்றோ அறிந்துவிட்டார்கள்.அதனால் சணல்– 4வின் ஆவணம் மக்களுக்கு பெரிதாக அதிர்ச்சியைக் கொடுக்கவில்லை.

அதைப் பார்த்த எல்லோரும் கூறியது "" இது எங்களுக்குத் தெரியும்தானே "" என்றுதான்.ஆக,அந்த ஆவணம் மக்களின் நிலைப்பாட்டை பலப்படுத்துவதற்கு –அவர்களின் நிலைப்பாடு சரி என்று கூறுவதற்கு உதவியாக இருந்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

மேலும்,முஸ்லிம்களுக்கும் இதற்கும் தொடர்பில்லை.இது அரசியலுக்காக செய்யப்பட ஒன்று என்று இந்த ஆவணம் மூலம் மக்கள் மேலும் புரிந்துகொண்டுள்ளனர்.

இதனால் இப்போது மக்களின் கவனம் முஸ்லிம் மக்களின் தரப்பில் இருந்து கோத்தா தரப்பிற்கு மாறிவிட்டது.இந்தத் தாக்குதலில் இனவேறுபாடுகள் இன்று மூவினத்தைச் சேர்ந்தவர்களும் தொடர்புபட்டுள்ளனர்.

அவர்கள் இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி இதைச் செய்யவில்லைஅவர்களின் அரசியல் தேவைக்காக இதைச் செய்துள்ளனர் என்று மக்களுக்கு விளங்கிவிட்டது.

இப்போது இருக்கின்ற அடுத்த பிரச்சினை இந்த ஆவணம் உண்மைதானா,இதில் அசாத் மௌலானா கூறுவது உண்மைதானா என்று கண்டறிவதுதான்.

அதற்கு உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்.உள்நாட்டு விசாரணைமூலம் ஒருபோதும் உண்மையைக் கண்டறிய முடியாது.ஏற்கனவே நடத்தப்பட்ட விசாரணைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன.விசாரணைகளில் தெரிவிக்கப்பட்ட சில தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில்,சணல் 4 வின் குற்றச்சாட்டை விசாரிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குழு ஒன்றை நியமித்துள்ளார். எதற்கெடுத்தாலும் குழுக்கள் நியமிப்பதிலும் அந்தக் குழுக்கள் மூலம் பிரச்சினைகளை மூடி மறைப்பதிலும் கெட்டிக்காரர் ரணில்.

அப்படி இந்த விடயத்திலும்கூட.இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் குழுவால் என்ன செய்ய முடியும்? குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க முடியுமா?இல்லை குற்றவாளிகளை அடையாளம் காட்டத்தான் முடியுமா?

இல்லை.எல்லாமே நாடகம்.

## ஜனவரியில் மின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தமக்கு அறிவிக்குமாறு பொது பயன்பாட்டு ஆணைக்குழு இலங்கை மின்சார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதற்கு ஏற்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜனவரியில் மீண்டும் மின்கட்டணம் உயர்வதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவிக்கிறது.

## ஜனவரியில் அமைச்சரவை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சில நாட்களுக்கு முன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் அனுரபிரியதர்சன யாப்பா,சுதர்சினி பெர்ணாண்டோபுள்ளே மற்றும் பிரியங்கர ஜயரத்ன ஆகிய எம்பிக்களுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

நிமால் லான்சாவால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியல் கூட்டமைப்பு தொடர்பில் பேசுவதற்கே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

புதிய கூட்டமைப்பு தொடர்பிலும் அரசின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பிலும் இங்கு விரிவாகப் பேசப்பட்டன.

அரசின் செயற்பாடுகள் தொடர்பில் கிராமப்புறங்களில் இருக்குன்ற அதிருப்தியை பிரியங்கர ஜயரத்ன அங்கு ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

அப்போது அதற்கு பதில் வழங்கிய ஜனாதிபதி ஜனவரி மாதமளவில் புதிய அமைச்சரவை மாற்றம் ஒன்று இடம்பெறும் என்ற சைகை ஒன்றை வெளிப்படுத்தினார்.






# ஜனாதிபதியைத் தேடி வந்த ஜப்பான் இளைஞர்



கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றம் சென்றபோது அங்கு அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதியை எதிர்பார்த்துக்கொண்டு நின்றார்கள்.கூடவே ஓர் இளைஞனும் .

அவர் ஜப்பான் நாட்டவர்.பல்கலைக்கழக மாணவன். நாடாளுமன்ற உறுப்பினராக பயிற்சி பெறுபவர்.

அது மாத்திரமல்ல கொழும்பு கொம்பனி தெரு பேர வாவிவை புனரமைப்பு செய்வது இந்த இளைஞனின் கம்பனிதான்.

அங்கு நின்ற எம்பிக்கள்–அமைச்சர்களுடன் உரையாடிய பின் அந்த இளைஞனை நாடாளுமன்ற சுற்று சூழலை நோக்கி அழைத்துச் சென்றார் ஜனாதிபதி.அவ்வாறு அழைத்துச் சென்று அவருக்கு அரசியல் பாடம் நடத்தினார் ரணில்.

# ஜப்பான் மொழியில் பேசிய பௌஸி



இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டு நின்ற ஆசுமாரசிங்க ““ பாத்தீங்களா..ரணிலிடம் அரசியல் படிக்க சர்வதேசத்தில் இருந்தே இளைஞர்கள் வாராங்க.நம்மட நாட்டு மக்கள் ரணிலை விரட்டுறாங்க.““ என்றார்.

ஆதற்கு ஆமாம் போட்ட ஜகத் சமரவீர எம்பி ““அந்த மனுசண்ட பெறுமதி யாருக்கும் விளங்குதில்ல..“ என்றார்.

அப்போது ஜனாதிபதியின் பக்கத்தில் பௌஸி எம்பியும் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வாவும் சென்றனர்.

அந்த ஜப்பான் இளைஞனோடு ஜப்பான் மொழியிலேயே பேசினார் பௌஸி. அதைப் பார்த்து அதிசயப்பட்டார் ஜனாதிபதி.

““ பௌஸி உங்களுக்கு ஜப்பான் மொழியும் தெரியும் என...““ என்று சொன்னார் ஜனாதிபதி.

நிமால் சிறிபாலடிசில்வா அந்த இளைஞனோடு ஆங்கிலத்தில் பேசினார்.

# ஜனாதிபதிக்காக வெளிநாட்டு பயணத்தை ஒத்திப்போட்ட எம்பி



ஜனாதிபதிக்கு ஆதரவாக நிமால் லான்சாவால் உருவாக்கப்படவுள்ள புதிய கூட்டமைப்பு பற்றி பேசுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனுரபிரியதர்சன யாப்பா ,பிரியங்கர ஜயரத்ன மற்றும் சுதர்சினி பெர்ணாண்டோபுள்ளே ஆகியோரை அழைத்திருந்தார்.

அன்றய தினம் வெளிநாடு ஒன்றுக்குச் செல்வதற்குத் தயாராக இருந்தார் பிரியங்கர.

ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அவர் அந்தப் பயணத்தை மறுநாளைக்கு ஒத்திப்போட்டார்.

அந்தக் கூட்டமைப்பில் முக்கிய இடம் வகிப்பவர்கள் இவர்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

# எல்லோருக்கும் வைரஸ் காய்ச்சல்



கடந்த வாரம் எம்பிக்களுக்கான நாடாளுமன்ற உணவகத்தில் அரச தரப்பு எம்பிக்கள் பலர் பேசிக்கொண்டு இருந்தனர்.

நாமல் ராஜபக்ஸ,நிமல் லான்சா,தி.டி.பி.சாணக,மஹிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்ட பலர் பேசிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் புதிதாக கல்யாணம் கட்டிய சாணக்கவை கிண்டலடித்துக்கொண்டிந்தனர்.

““ உங்கட கல்யாண ஊட்டுக்கு வந்த எல்லோருக்கும் வைரஸ் காய்ச்சல் .அதுக்கு நாங்க டி.பி வைரஸ் என்று சொன்னோம் .““ என்றார் நாமல்.

அப்போது சணல்–4 விவகாரம் பற்றியும் பேசத் தொடங்கினர்.அந்த சணல் எம்மைப்பற்றி பொய்யான தகவல்களை பரப்புகிறது என்று கதையைத் தொடக்கி வைத்தார் லான்ஸா.

அதற்கு ஆமா போட்ட நாமல் இந்த சணலுக்கு ஆரம்பத்தில் இருந்தே எங்கள்மீது கோபம் இருக்கிறது என்று கூறினார்.

இந்த விவகாரத்தை நீங்கள் கையில் எடுக்க வேண்டும் என்று நாமலுக்கு அறிவுரை வழங்கினார் மஹிந்தானந்த அழுத்கமகே.

நாமலும் சரி என்றார்.

## துப்பறிவாளன்

# சஜித்துக்கு நன்றி



*சில நாட்களுக்கு முன் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவின் கையடக்கத் தொலைபேசிக்கு ளஅள ஒன்று வந்தது.*

*அது உள்நாட்டில் இருந்து அல்ல.வெளிநாட்டில் இருந்து.அமெரிக்காவில் இருந்து.*

*அதை அனுப்பியவர் லசந்த விக்ரமதுங்கவின் மகள்.அது ஒரு நன்றி கூறும் ளஅள.*

*சணல் -4 தொலைக்காட்சியில் வெளிப்படுத்தப்பட்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான ஆவணத்தில் லசந்தவின் கொலை தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.*

*இது தொடரில் சஜித் நாடாளுமன்றில் உரையாற்றி இருந்தார்.*

*அதற்கு நன்றி தெரிவித்தே அந்த ளஅள வந்திருந்தது.*

*லசந்தவின் கொலை தொடர்பில் அவரது மகள் அமெரிக்காவில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளில் இறங்கி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.*





# விமலுக்கு புகழாரம்

கடந்த வாரம் லக்ஷ்மன் கிரியெல்லவும் விமல் வீரவன்சவும் நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் சந்தித்துக் கொண்டனர்.

சிறிது நேரம் பல விடயங்களை பேசினர்.

அப்போது விமல் வீரவன்ச மேடைகளில் பேசி வரும் பேச்சுக்களை புகழ்ந்து தள்ளினார் கிரியெல்ல.

“பேச்சு நல்லா இருக்கு.மக்கள் அதைத்தான் விரும்புறாங்க. உங்கட பேச்ச விரும்பி கேக்குறாங்க.கறிவேப்பிலை போட்டு நல்லா ருசிப்படுத்தி சொல்றீங்க.

உங்களையும் மொட்டு கட்சி கறிவேப்பிலை மாதிரிதான் பாவித்துவிட்டு வீசிவிட்டது““ என்றார்.



# ஜப்பானுக்கு சென்று ஏசிய தயாசிறி

தயாசிரிய ஜயசேகரவை மைத்திரிபால சிறிசேன சுதந்திர கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து நீக்கிவிட்டார் அல்லவா .அதற்கு என்ன காரணம் தெரியுமா?

தயாசிறி செல்கின்ற இடமெல்லாம் மைத்திரிக்கு ஏசுகிறாராம்.அதிலும் ஜபபானுக்கு சென்று அங்கும் ஏசி இருக்காராம்.

அதனால் ஆத்திரமடைந்துதான் மைத்திரி தயாசிரியை நீக்கினாராம்.

நிமால் லான்சாவின் புதிய கூட்டமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் அவர்கள் கூடிப் பேசியபோதே அங்கு இந்த கதையும் அடிபட்டது.

- தொடர் - 02 -

# அஹதிய்யா அறநெறிப் பாடசாலைகளும் சட்டவிரோத கட்டணங்களும்

மத்திய மாகாணம் மற்றும் மேலும் ஒருசில மாகாண ஆளுநர்கள் ஞாயிறு தினங்களில் இடம்பெறும் அறநெறிப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் கட்டாயம் செல்வதை ஊக்கப்படுத்தி அத்தினங்களில் காலை நேரத்தில் நடைபெறும் அனைத்து மேலதிக வகுப்புக்களையும் அரச சுற்றறிக்கைகள் ஊடாக தடை செய்துள்ளனர்.

அத்துடன் இவ்வாறான வகுப்புக்கள் இடம்பெறுவதை தண்டனைக்குரிய குற்றமாகவும் அறிவித்துள்ளது.

வாராந்தம் காலை 7.30 மணி முதல் 11.30 மணி வரை ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறும் பௌத்த,இந்து,மற்றும் இஸ்லாம் உட்பட கிறிஸ்தவ அறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பில் அரசு வருடாந்தம் 50 மில்லியன்களுக்கும் அதிகமான தொகையை செலவிடுவதாக இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான சீருடைகள் உட்பட அவர்களுக்கான வருடாந்த கொடுப்பனவுகள் என பெருந்தொகை பணத்தை அரசு செலவு செய்து வருவதாக மத விவகார அமைச்சின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இக்கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் முஸ்லிம் கலாச்சார திணைக்களத்தின் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளிலும் அஹதிய்யா பாடசாலைகளின் அபிவிருத்திக்கென செலவளிக்கப்படும் நிதி தொடர்பில் புள்ளி விபரத் தரவுகளை வெளியிட்டுள்ளன.


“பாடசாலை செல்லும் அனைத்து முஸ்லிம் மாணவர்களுக்கும் மும்மொழிகளிலும் இஸ்லாமிய சன்மார்க்க அறிவை வழங்கும் நோக்குடன் 1951 காலப் பகுதியில் அன்றைய இலங்கை முஸ்லிம் சமூகத் தலைவர்களால் காலியிலும் கொழும்பிலும் ஆரம்பிக்கப்பட்ட அஹதிய்யா சன்மார்க்கப் பாடசாலைகள் 1990 களின் பின்னர் வட மாகாணத்தைத் தவிர்த்து இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன.

அகில இலங்கை அஹதிய்யா மத்திய சம்மேளனமும் பிராந்திய முஸ்லிம் பள்ளிவாயல் நிர்வாகங்களும் இதன் பின்னணியில் இருந்தனர்”, என குருவிட்ட ஸஹிரா அஹதிய்யா பாடசாலையின் முன்னாள் அதிபர் எம்.ஏ.எம்.அக்ரம் தெரிவிக்கிறார்.

1990 களின் பின்னர் அஹதிய்யா பாடசாலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த அரசு முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் ஊடாக அஹதிய்யா பாடசாலைகளின் மேம்பாட்டிற்கு உதவ முன்வந்தது.

இதற்கென பல மில்லியன் கணக்கான நிதியை அரசு ஊடாக அஹதிய்யா பாடசாலைகளுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதை முஸ்லிம் கலாச்சார திணைக்களத்தின் வருடாந்த அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

“அஹதிய்யா ஆசிரியர்களுக்கான கொடுப்பனவிற்கென கடந்த ஐந்து ஆண்டுகளில் மாத்திரம் 10 மில்லியனுக்கும் மேற்பட்ட தொகையையும் ஆசிரியர்களின் சீருடைகளுக்கென 3.7 மிலியனையும் ,பாடப் புத்தங்களை அச்சிடுவதற்கு மாத்திரம் 41 மில்லியனுக்கும் மேற்பட்ட தொகையையும் அஹதிய்யா பாடசாலைகளின் அபிவிருத்திக்கென அரசு செலவுசெய்துள்ளது”, என தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக முஸ்லிம் கலாச்சாரத் திணைக்களம் நிதித் தரவுகளை வெளிப்படுத்தியுள்ளது.



முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS
P.O. Box 543, No. 180, T. B. Jayah Mawatha, Colombo 10
E-mail : director@muslimaffairs.gov.lk
Web : www.muslimaffairs.gov.lk

MRCA/R/09/RTI/2023 — 2023.06.16

எம்.எல்.எஸ். முஹம்மத்
இல. 14, வைத்தியசாலை வீதி
மாவனல்லை.

**2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டம் தொடர்பானது**

அஹதிய்யாப் பாடசாலைகள் தொடர்பில் தங்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள 2023.05.30 ஆம் திகதிய கடிதம் தொடர்பானது.

1. இலங்கையில் இயங்கும் அஹதிய்யா பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை சம்பந்தமான தகவல்கள் எம்மிடம் இல்லை. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அஹதிய்யா பாடசாலைகளின் எண்ணிக்கை 603 ஆகும்
2. அஹதிய்யா பாடசாலைகளின் மேம்பாட்டிற்கு கலாச்சார அமைச்சின் ஊடாக எந்த நிதியும் கிடைக்கவில்லை
3. திருப்பி அனுப்பப்படவில்லை
4. அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை : 59208
5. அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்களாக ஆலிம்கள் : 525
அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்களாக உயர் தரம் சித்தியடைந்தவர்கள் : 2665
அஹதிய்யா பாடசாலை ஆண் ஆசிரியர்கள் : 1498
அஹதிய்யா பாடசாலை பெண் ஆசிரியர்கள் : 2781
6. கடந்த ஐந்து வருடங்களாக அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்ட மொத்தத் தொகை : ரூபா 104,535,000.00
சீருடைகளுக்காக வழங்கப்பட்ட மொத்தத் தொகை : ரூபா 37,264,571.00
7. ஒரு முறைப்பாடு
8. ஆசிரியர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகள் ஊடாக உதவித் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது நிதி ஊழல்களில் ஈடுபட்ட அதிபரிடம் விசாரணை செய்து குறித்த பணம் மீளப்பெற்று குறித்த ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது
9. அது பற்றிய தகவல் எமது திணைக்களத்திற்கு கிடைக்கவில்லை.
10. இல்லை

இரத்தினபுரி அஹதிய்யா பாடசாலையில் கடந்த 22 வருடங்களுக்கும் மேலாக ஆசிரியையாக கடமையாற்றி வரும் எம்.என்.பி.பரூஸாவிடம் உங்கள் அஹதிய்யாவில் மாணவர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படுகிறதா? எனக் கேட்ட போது அவர் இவ்வாறு பதில் தருகிறார்.

“ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் மாதாந்தம் இருநூறு ரூபா கட்டணமாக அறவிடும் நடைமுறை பல வருடங்களாக இடம்பெற்று வருகிறது. இக்கட்டணம் இப்போது ஐநூறு ரூபாக உயர்த்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் அனுமதிக் கட்டணம் என மற்றுமொரு ஐநூறு ரூபா அறவிடப்படுகிறது. கட்டணங்களை சேகரிப்பதற்காக சில யுவதிகளை அதிபர் நியமித்துள்ளார். எனினும் இதற்குரிய பற்றுச் சீட்டுக்கள் மாணவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை.

அத்துடன் 20இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இங்கு கடமை புரிவதாக எமது அஹதிய்யா ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் நாம் ஆறு பேர் மாத்திரம்தான் எமது அஹதிய்யாவில் கற்பிக்கிறோம்.எனினும் கடந்த இரண்டு வருடங்களாக எமக்குரிய எந்தக் கொடுப்பனவும் கிடைக்கப் பெறவில்லை”, என அவர் தெரிவிக்கிறார்.

இரத்தினபுரி படுகெதரயைச் சேர்ந்த எம்.எஸ்.எம் அமீனுடன் இது தொடர்பாக கதைத்த போது “இரத்தினபுரி அஹதிய்யாவில் மாணவர்களிடமிருந்து இருநூறு ரூபா முதல் ஐநூறு ரூபா வரையில் பல்வேறு கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

அதிபரின் பாடசாலையில் அல்லது ஏனைய பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் அஹதிய்யா அனுமதிக் கட்டணமாக ஐநூறு செலுத்த வேண்டும்.

எனது மூன்று பிள்ளைகளுக்கும் கட்டணமாக ரூபா.1500.00 செலவாகிறது. சட்ட விரோதமான முறையில் மாணவர்களிடம் கட்டணம் அறவிடும் நடைமுறை உடனடியாக நிறுத்தப்பட்டு மீண்டும் அஹதிய்யாவின் இலவசக் கல்வி உறுதிப்படுத்தப்பட வேண்டும்”, என அவர் தெரிவிக்கிறார்.

இப்பிரச்சினை தொடர்பாக இரத்தினபுரி அஹதிய்யா பாடசாலையின் பிரதி அதிபரிடம் கேட்ட போது

“எமது அஹதிய்யாவில் 20 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வாராந்தம் வருகின்றனர்.இவர்களுக்கு மாதம் இரண்டாயிரம் ரூபா போக்குவரத்து செலவிற்கென வழங்கும் நடைமுறை நாட்டிலுள்ள எல்லா அஹதிய்யாக்களிலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

எங்கள் அஹதிய்யாவிற்கு எந்தவொரு தனிப்பட்ட நன்கொடையும் கிடைப்பதில்லை.இதனாலேயே மாணவர்களிடம் கட்டணம் அறவிடுகிறோம்.

அத்துடன் கட்டணம் குறைவாக இருக்கின்ற போது அஹதிய்யா கல்வியின் பெறுமதியை மக்கள் உணர தவறுகின்றனர்.

இதனாலேயே மாதாந்தக் கட்டணத்தை ஐநூறு ரூபா வரை உயர்த்தியிருக்கிறோம்”, என அவர் நியாயப்படுத்த முயற்சிக்கிறார்.






–தொடரும்–




# அமில கோல்ட் ஹவுஸிற்கு SLIM SMEDA விருது

காலி நகரை யைப்படுத்தி 25 ஆண்டுகளாக இயங்கி வரும் அமில கோல்ட் ஹவுஸ் நிறுவனம், இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட (SLIM சிறிய மற்றும் மத்தியளவிலான தொழில்முனைவோர் அபிவிருத்தி விருது விழாவில் (SMEDA) Arts & Crafts பிரிவில் வெள்ளிப்பதக்க விருதை வென்றுள்ளது.

கொழும்பு கிறான்ட் மொனாச் இம்பீரியல் ஹோட்டலில் கோலாகலமாக நடைபெற்ற விருது விழாவில் அமில கோல்ட் ஹவுஸ் அதிபர் திரு அமில இந்துனில் டீ சில்வாவிற்கு மேற்படி விருது வழங்கப்பட்டது.

இதற்கு முன்னரும் தென் மாகாணத்தின் சிறந்த தொழில்முயற்சியாளருக்கான விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளை திரு அமில இந்துனில் டீ சில்வா வென்றுள்ளார். 2019 ஆம் ஆண்டில் முதல் தடவையாக தங்க ஆபரண நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்ட ISO 9001 - 2015 தரச் சான்றிதழை வென்ற பெருமையும் அமில கோல்ட் ஹவுஸ் நிறுவனத்தையே சேரும்.

# Haycolour நிறுவனத்திற்கு சான்றிதழ்கள்



Haycolour நிறுவனம் Global Organic Textile Standard (GOTS) மற்றும் Zero Discharge of Hazardous Chemical (ZDHC) போன்ற தரமான பேண்தகைமை சான்றிதழ்களைப் பெற்றுள்ளது.

மேலும் நிறுவனம் ஏற்றுமதி அன்னிய செலாவணியை அதிகரிக்க எதிர்பார்ப்பதுடன், பேண்தகைமையின் ஊடாக புதிய ஏற்றுமதி சந்தைகளில் வியாபாரத்தினை விரிவுபடுத்த எதிர்பார்த்துள்ளது.

தற்போது Haycolour நிறுவனமானது பங்களா தேசத்தில் முதன்மை ஏற்றுமதியாளக திகழ்ந்து வருகின்றதுடன் இந்தியா, பாகிஸ்தான், மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் குறுகிய காலத்தில் ஏற்றுமதி துறையில் முன்னேற்றம் கண்டுள்ளது.

இலங்கையின் முதல் water-based pigment emulsion உற்பத்தியாளரான Haycolour(Pvt) Ltd ஆனது Hayleys Aventura (Pvt) Ltd நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். மேலும் Haycolour நிறுவனமானது சுற்றாடல் சம்பந்தமான இரு பேண்தகைமை சான்றிதழ்களை பெற்று வினைத்திறனான நிபுணத்துவம் பெற்ற புத்தாக்க உற்பத்தியின் ஊடாக ஏற்றுமதி வாய்ப்புகளை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

GOTS மற்றும் னுஆஉஊ போன்ற தலைமைகளினூடாக ஏற்றுமதி செலாவணினை அதிகரிக்க முடிவதுடன் ஏற்றுமதிக்கான சந்தையினை தக்க வைத்துக் கொள்வதுடன் புதிய வாய்ப்புகளை கண்டறிந்து சந்தை பங்கினை விரிவாக்க முடிவதுடன். மேலும் பேண்தகைமையின் ஊடாக சிறந்த தரத்திலான வர்ணம் தொடர்பான தேவைகளுக்கு தீர்வுகளை தெற்காசிய நாடுகளுக்கு வழங்க முடியும் என Hayleys Aventura நிறுவனத்தின் நிர்வாக முதல்வர் trg ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

# கேம்பிரிட்ஜ் கல்வி மாநாடு

இலங்கையில் கல்வியின் எதிர்காலத்தை வடிவமைக்க கல்வி நிபுணர்கள் மற்றும் தலைவர்கள் ஒன்றிணைவு

Cambridge University Press and Assessment நிறுவனமானது, இலங்கையில் கேம்பிரிட்ஜ் கல்வி மாநாட்டை அண்மையில் நடாத்தியிருந்தது.

இது நாடு முழுவதிலும் உள்ள கல்வித் துறையைச் சேர்ந்த புகழ்பெற்ற நிபுணர்கள் மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்ததோடு, கல்வி வளர்ச்சிப் பாதை தொடர்பான வரைபடத்தை ஆராய்வதற்கும் அதன் எதிர்காலத்தை திட்டமிடுவதற்குமான வாய்ப்பை இது ஏற்படுத்தியிருந்தது.

கொழும்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்விச் சூழல் தொகுதியில் ஏற்பட்டு வரும் வளர்ச்சி குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், இதில் கலந்துகொண்ட நிபுணர்களால் சிந்தனையைத் தூண்டும் முக்கிய உரைகள், கலந்துரையாடல்கள், நுண்ணறிவு கொண்ட விளக்கங்களும் இடம்பெற்றன.

இந்நிகழ்வானது, இலங்கையின் கல்விச் சூழல் தொகுதியின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு பங்களிக்கும் வகையில், அது தொடர்பானவர்களுடன் ஒரு இணைப்பை ஏற்படுத்தவும், கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவும், ஒத்துழைப்பை உருவாக்கவும் ஒரு தளத்தை ஏற்படுத்தியிருந்தது.

'Envisioning the Growth Map in Education' (கல்விக்கான வளர்ச்சிப் பாதை வரைபடத்தை திட்டமிடல்) எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு இடம்பெற்ற இந்நிகழ்வானது, இலங்கையின் 'Growth Map in Education' (கல்விக்கான வளர்ச்சிப் பாதை வரைபடத்தை) ஆராய்ந்து, அதனை வரையறை செய்வதற்காக, கேம்பிரிட்ஜ் கல்வி மாநாட்டின் கல்விச் சூழல் தொகுதி முழுவதும் உள்ள பிரபலங்களையும் நிபுணர்களையும் கவர்ந்தது.




# ஹேலிஸின் உச்சி மாநாடு



முற்போக்கான தோட்ட நிர்வாகத்தில் உலகளாவிய முன்னணி நிறுவனமான ஹேலிஸ் பிளான்டேஷன்ஸ், டீஆஜஊஉ இல் முதலாவது கார்பன்-நடுநிலை சர்வதேச தோட்டங்களின் பேண்தகைமை உச்சிமாநாட்டை (IPSS) வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

நாள் முழுவதும் நடைபெற்ற இந்த மாநாட்டிற்கு, இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள பெருந்தோட்டங்கள், விவசாயம் மற்றும் பேண்தகைமை நிபுணர்களின் ஈர்க்கக்கூடிய வரிசையை ஒன்றிணைத்து, வளர்ந்து வரும் சிறந்த நடைமுறைகள் மற்றும் விவசாய நிர்வாகம் மற்றும் மனித வளங்களில் புத்தாக்கமான முன்னேற்றங்களைப் அடுத்த சதாப்தத்திற்கு பகிர்ந்து கொண்டது.

இந்த மாநாட்டிற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு கருத்து தெரிவித்த ஹேலீஸ் குழுமத்தின் பிரதானியும் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹான் பண்டித்தகே, சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பங்குபற்றிய அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

"GDP மற்றும் ஏற்றுமதி வருவாய்க்கு பங்களிக்கும், பெருந்தோட்டத் தொழிற்துறையின் முக்கியத்துவம் மிகைப்படுத்த முடியாது. அதன் பொருளாதார தாக்கத்திற்கு அப்பால், அது நமது சக குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் மற்றும் நமது நாட்டின் அழகிய இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது."

"Hayleys இல் நாட்டின் தேயிலை உற்பத்தியில் சுமார் 4.6% மற்றும் ரப்பர் உற்பத்தியில் 4.7% பங்களிப்பதில் பெருமை கொள்கிறோம். எமது தோட்டங்களை நாங்கள் நடத்தும் நெறிமுறை மற்றும் நிலையான வழி, உயலடநலள இலங்கையின் முதல் நிறுவனமாக தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக தரவரிசைப்படுத்தப்படுவதற்கும், குவைஉா இன் மதிப்புமிக்க AAA மதிப்பீட்டிற்கு பங்களித்துள்ளது. ""எனத் தெரிவித்தார்.

# இரத்தினக்கல் ஆபரணக் கைத்தொழிலை மேம்படுத்த ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம்

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் கைத்தொழிற்துறைக்கு புத்துயிர் அளிப்பது தொடர்பான ஒரு முக்கிய படியாக, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA) மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடமும் இணைந்து ஒரு முக்கியமான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் (MOC) கைச்சாத்திட்டுள்ளன.

இந்த முக்கிய நிகழ்வு கடந்த 2023 ஒகஸ்ட் 23ஆம் திகதி பல்கலைக்கழகத்தின் செனட் சபை விசேட வளாகத்தில் இடம்பெற்றது.

SLGJA இன் பட்டைதீட்டல் பிரிவின் உப தலைவர் பின்சிறி விஜேபால மற்றும் அவரது குழுவினரால், பட்டைதீட்டும் அம்சத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் நோக்கத்துடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு, இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில்துறையில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதையும் இது குறிக்கிறது.

இக்கைச்சாத்திடும் நிகழ்வில், இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்தின் தலைவர் அஜ்வார்ட் டீன், சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் பட்டைதீட்டல் பிரிவின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி திலக்சிறி பண்டார, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் இயந்திரவியல் பிரிவின் தலைவர் கலாநிதி துலானி முதுன்கொட்டுவ, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்தின் பட்டைதீட்டல் பிரிவின் உப தலைவர் பின்சிறி விஜேபால உள்ளிட்ட ஏனைய முக்கியஸ்தர்களின் பிரசன்னத்துடனும் அவர்களது முக்கிய உரைகளுடனும் இந்நிகழ்வு இடம்பெற்றது.



# கல்வியலாளர்களும் அரசியலுக்கு வரவேண்டும்!




கல்வியலாளர்களும் அரசியலுக்கு பிரவேசித்தால் மாத்திரமே

அரசியலில் மாற்றத்தை கொண்டு வர முடியம்.

இளைஞர்கள் உயர் கல்வி கற்றல் – காலத்தின் தேவையாகும் !

கல்வி எழுச்சி ஊடாகவே சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளரும் அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளருமான

திரு. இல்ஹாம் மரிக்கார் கருத்து தெரிவித்தார்.

புத்தளம் ஞௌழகவ கல்லூரியின் விருது வழங்கல் விழா 30ஃ08ஃ2023 கந்தையா மண்டபத்தில் நடை பெற்றது. இதில் விஷேட அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய பேராதனை பல்கலைக்கழக





விரிவுரையாளரும் அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளருமான திரு. இல்ஹாம் மரிக்கார் கருத்து தெரிவித்தார்.

இளைஞர்கள் உயர் கல்வி கற்றல் – காலத்தின் தேவையாகும் !

கல்வி எழுச்சி ஊடாகவே சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்

கல்வியலாளர்களும் அரசியலுக்கு பிரவேசித்தால் மாத்திரமே

அரசியலில் மாற்றத்தை கொண்டு வர முடியம் என ஒரு சிறிய உரையையும் வழங்கினார்.

# இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்தின் மூலோபாய மைய முன்மொழிவு

இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் அண்மையில் தனது திட்டமான 'Sri Lanka Gemstone Hub Strategy Sapphire Capital of the World' (இரத்தினக்கல் மைய மூலோபாய நீல மாணிக்க உலகின் தலைநகரம் இலங்கை) இனை அரசாங்கத்திடம் கையளித்துள்ளது.இது தொடர்பான விழா சின்னமன் கிராண்ட் ஹோட்டலில் கடந்த ஒகஸ்ட் 24ஆம் திகதி நடைபெற்றது.

இவ்விழாவில் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்தின் தலைவர் அஜ்வார்ட் டீன் உரையாற்றுகையில், "பல மாதகால உன்னிப்பான திட்டமிடல், கூட்டு முயற்சிகள் மற்றும் தொலைநோக்கு சிந்தனை ஆகியவற்றின் மூலம் இன்று நாம் பெருமையுடன் முன்வைத்துள்ள இந்த கருத்தறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த முக்கியமான படியை நாம் முன்னெடுத்துச் செல்வதற்கு, இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையை மேம்படுத்துவதற்கும் அதன் முன்னேற்றத்திற்கும் உறுதியான



அர்ப்பணிப்புடன் செயற்படும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வையுடன் எமது அபிலாஷைகளை இணைத்துக்கொள்வதற்கு எமக்குக் கிடைத்த தனித்துவமான பாக்கியமாகும். இலங்கையின் வளர்ச்சியில் இந்தத் துறையின் முக்கிய பங்கை அங்கீகரித்து ஜனாதிபதி அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தமையும் இதற்கு ஒரு சான்றாகும்." என்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பல்வேறு பிரமுகர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு இந்த கருத்தறிக்கையின் முன்மொழிவுகளை, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்தின் முன்னாள் தலைவர் சானக எல்லாவல விளக்கினார்.

துபாய், தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகளைப் போன்று, இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களை விற்பனை செய்வதற்கான சுதந்திர வர்த்தக காலத்தை நிறுவுவதன் மூலம் இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில்துறைக்கு ஒரு சலுகைக் காலத்தை வழங்குவதே இந்த முன்மொழிவின் முக்கிய நோக்கமாகும். இது இத்துறையில் குறுகிய கால மற்றும் நீண்ட கால சந்தை நிலைமைகளை பாரியளவில் மேம்படுத்தும் என்பதுடன், நாட்டிற்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டவும் உதவும்.

# விமான நிலையத்தில் Uber

கொழும்பில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (ஊஐயு) சவாரியாளர்கள் வாகனங்களில் ஏறுவதற்கான பிரத்தியேகமான இடத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக ருடிநச அறிவித்துள்ளது.

இலங்கைக்கு வருகை தரும் பயணிகள் இப்போது இந்த விசேடமாக நியமிக்கப்பட்ட இடப் பகுதியில் தமது ருடிநச சவாரியை எளிதாகக் கண்டுபிடித்து, பயணம் தொடர்பான மன அழுத்தம் மற்றும் யூகங்களை இனிமேலும் முகங்கொடுக்க தேவையற்ற ஒரு விடயமாக மாற்றிக்கொள்ள முடியும். இது இலங்கையில் தொழில்துறையில் இந்த வகையில் முதன்முதலாக அறிமுகமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

விமான நிலையத்தின் பயணிகள் வருகை முனையத்தில் அமைந்துள்ள




ருடிநச வாகனங்களில் ஏறிக்கொள்ளும் இடத்தில், ருடிநச இன் பயணிகள் வரவேற்பு பற்றிய உரிய தகவல் விபரங்களுக்கு பயணிகள் இப்போது சேவை மையங்களை அணுகலாம்.

# நிலைபேறான நடவடிக்கைகளில் SLT-MOBITEL

சமூகத்திலும் சூழலிலும் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் அங்கமாக, SLT-MOBITEL இனால் பல்வேறு நிலைபேறான சூழல், சமூக, ஆளுகை (ESG) நடவடிக்கைகள், கம்பளை, ஜினராஜ மகா வித்தியாலயத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியில் மூன்று திட்டங்கள் அடங்கியிருந்ததுடன், பல பெறுமதி வாய்ந்த பங்காளர்களுடன் SLT-MOBITEL கைகோர்த்து, அந்த சமூகத்தில் நீடித்து நிலைத்திருக்கும் தாக்கத்தையும், நிலைபேறான அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

செயற்திட்டங்களில் STEM (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) தொடர்பான கல்வி விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுப்பது, மாணவர் தொழில்முயற்சியாண்மையை ஏற்படுத்துவது, "மனமிருந்தால் புத்தகமொன்றை வழங்குங்கள்" எனும் தொனிப்பொருளில் புத்தக நன்கொடைத் திட்டம் வாசிப்பு கலாசாரத்தை மேம்படுத்தும் வகையிலும், ஒகில்வி பொது உறவுகள் ஸ்ரீ லங்கா உடன் இணைந்து மர நடுகைத் திட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

SLT சார்பாக இந்நிகழ்வில் R1-பிராந்திய செயற்பாடுகள் பொது முகாமையாளர் அனுருத்த ரத்நாயக்க மற்றும் பொது உறவுகள் பிரதி பொது முகாமையாளர் நிலந்தி ஜயகொடி ஆகியோர் பங்கேற்றிருந்ததுடன், பாடசாலையின் அதிபர், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுடன், ஒகில்வி பொது உறவுகள் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் அதிகாரிகள், கம்பளை SLT-MOBITEL வாடிக்கையாளர் கழகத்தின் அங்கத்தவர்கள் மற்றும் SLT-MOBITEL அதிகாரிகள் மற்றும் STEMUP மையத்தின் தன்னார்வ செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# மதிப்புமிக்க நிறுவனங்கள் வரிசையில் HNB

இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, 2022 ஆம் ஆண்டில் ஐந்தாவது தடவையாக இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டது.

The American Institute of Certified Public Accountants மற்றும் Chartered Institute of Management Accountants (AICPA & CIMA), The International Chamber of Commerce Sri Lanka (ICCSL) ஆகியவற்றால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த தரவரிசை, பங்குதாரர்களுக்கு நீடித்த மதிப்பை உருவாக்கி, நிறுவன சிறப்பை ஊக்குவிக்கும் இலங்கை நிறுவனங்களை அங்கீகரிக்க ஒரு தளமாக செயல்படுகிறது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி செயலாளர் சமன் ஏகநாயக்க கலந்துகொண்டதுடன், இந்த நிகழ்வில் முக்கிய உரையை இலங்கைக்கான ஜப்பானின் பிரதித் தூதுவர் முயவளரமை முழவயசழ நிகழ்த்தினார்.

”வலுவான உள்ளூர் மற்றும் உலகப் பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுக்கையில், இலங்கையின் மிகவும் போற்றப்படும் நிறுவனங்களில் ஒன்றாக HNB இன் மீள்உறுதிப்படுத்தல், எமது குழுவின் மதிப்புகள் மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, அத்துடன் HNB தொடர்ச்சியாகக் கொண்டிருக்கும் செயற்பாட்டுச் சிறப்புகள் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றின் வலுவான மற்றும் நெகிழ்ச்சியான அடித்தளத்தைப் பறைசாற்றுகிறது.

# வாய்ச் சுகாதார நிகழ்வுகள்




அத்துடன் வாய்ச் சுகாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பான பொதுமக்களுக்கான இந்த முயற்சிகள் நாட்டு மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

வாய்ச் சுகாதார பராமரிப்பு தொடர்பான ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்கும், புத்தாக்கமான தயாரிப்புகளை வெளியிடுவதற்கும், வாய்ச் சுகாதாரம் தொடர்பான பாதுகாப்பு அணுகுமுறையை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடாத்துவதற்கும் க்ளோகார்ட் உறுதியுடன் இருந்து வருகிறது.

கடந்த 10 வருடங்களாக, சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை (MOH) பிராந்திய அலுவலகங்களுடன் இணைந்து வாய்ச் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை க்ளோகார்ட் முன்னெடுத்து வருகின்றது. இது சிறந்த வாய்ச் சுகாதாரப் பழக்கவழக்கங்கள் தொடர்பான பாடத்திட்டத்திற்கு உதவியாக அமைகின்றது.

பற்குழிகள் அற்ற தேசத்தை கட்டியெழுப்புவதற்கான சமூகப் பணியை, Hemas Consumer Brands இனது நம்பகமான வாய்ச் சுகாதார பராமரிப்பு வர்த்தகநாமமான க்ளோகார்ட் (Clogard), நீண்ட காலமாக முன்னெடுத்து வருகிறது.

இதன் மூலம் கடந்த சில வருடங்களில் ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த வாய்ச் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை அது ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைச் சந்தையில் முன்னணியில் உள்ள மற்றும் பயனுள்ள வர்த்தக நாமங்களில் ஒன்று எனும் 30 வருட வரலாற்றை க்ளோகார்ட் கொண்டுள்ளது.




# ஜோன் கீல்ஸின்

## போதைப்பொருள் விழிப்புணர்வு

ஜோன் கீல்ஸ் பவுண்டஷன் பாடசாலை மாணவர்களிடையே போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்வை வெற்றிகரமாக நடத்தி வருகிறது.

அதிக போதைப்பொருள் பாவனையாளர்கள் 16 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்களாக உள்ளார்கள். முக்கியமாக, பாடசாலை சிறார்களை குறிவைக்கும் பொருட்கள், இனிப்புகள் மற்றும் உபசரிப்புகளுடன் கூடிய மருந்துகள் மற்றும் மயக்க மருந்துகளாகும்.

அவை கல்வி நிறுவனங்களுக்கு அருகில் சந்தேகத்திற்குரிய விற்பனையாளர்களால் விற்கப்படுகின்றன.

இந்த நெருக்கடியான பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முக்கியமான தேவையை உணர்ந்து, ஜோன் கீல்ஸ் குழுமத்தின் கூட்டாண்மை சமூக பொறுப்பு நிறுவனமான ஜோன் கீல்ஸ் பவுன்டேஷன் (ஜேகேஎஃ), 2020 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து அதன் போதைப்பொருள் பாவானை தடுப்பு விழிப்புணர்வு திட்டத்தில் தீவிரமாக முன்னணியில் உள்ளது.



# தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் 24 வது வருடாந்த பொதுக் கூட்டம்

தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் 24 வது வருடாந்த பொதுக்கூட்டம் தாஜ் சமுத்ராவில் உள்ள Grand Marquee நிகழ்வு மண்டபத்தில், தொழில்துறையுடன் தொடர்புபட்ட தரப்பினர் மற்றும் மதிப்பிற்குரிய விருந்தினர்களின் முன்னிலையில் 2023 செப்டெம்பர் 1 அன்று நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் வதிவிடப் பிரதிநிதி திரு விமலேந்திரா ஷரன் கலந்து கொண்டார்.

வருடாந்த கூட்டத்தின் போது, உறுப்பினர்களின் ஏகோபித்த ஒப்புதலுடன், தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவராக திரு கணேஷ் தெய்வநாயகம் இரண்டாவது முறையாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

அவர் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், “இரண்டாவது முறையாக தலைவராக பணியாற்றுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எனது தலைமையின் மீது நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை வைத்துள்ள எமது உறுப்பினர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் – என்றார்.






Coca-Colaவின் அனுசரணையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'The Legend Hariharan – Live In Colombo' பிரமாண்டமான இசை நிகழ்ச்சி இசை ரசிகர்களின் மனதைவிட்டு நீங்காதுள்ளது. உணர்வுகளைத் தூண்டி எழுப்பும் உயசாையசயஜென் இனிமையான குரல் போலவே உலகப் புகழ்பெற்ற கீபோர்ட் கலைஞர் ளுவநிநநெ ஹநளயளளல, பின்னணிப் பாடகியும் நடிகையுமான Sivaangi, புகழ்பெற்ற பாடகி ளுசலைளைய மற்றும் தென்னிந்திய பிரபல தொலைக்காட்சி தொகுப்பாளரான ஆய Ka Pa Anand ஆகியோர் அடங்கிய தனித்துவமான நிகழ்ச்சி நாடு முழுவதிலுமுள்ள ஆயிரக்கணக்கான ரசிகர்களை கவர்ந்திழுத்துள்ளது.




# ஐந்தாவது வருட வெற்றிக் கொண்டாட்டம்

விடாமுயற்சி மற்றும் வளர்ச்சியின் மகத்தான பயணத்தில், ஏசியா அசெட் ஃபினான்ஸ் பிஎல்சி தனது இராகலை கிளையின் 5வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறது.

ஆரம்பத்தில் இந்த கிளையின் அமைவிடத்தின் அடிப்படையில், ஒரு முக்கியத்துவமான கிளையாக கருதப்படாத ஒரு நகரத்தில், அரை தசாப்தத்திற்கு முன்பு ஒரு மிகவும் எளிமையான முயற்சியாகத் தொடங்கப்பட்ட இந்த வர்த்தக முயற்சி, இப்போது வெற்றிக்கும் சமூக ஈடுபாட்டிற்கும் ஒரு மிகச் சிறந்த உதாரணமாக மாறியுள்ளது.

இதன் இராகலை கிளை ஆரம்ப நாட்களில், வரையறுக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதியுடன் கூடிய பிரதேசத்தில் செயல்படுவதில் பல சவால்களை எதிர்கொண்டது. இருப்பினும், இந்த நகரத்தின் முழுமையாக வெளிக்கொண்டு வராப்படாத வளர்ச்சி வாய்ப்புக்கள் மற்றும் நெகிழ்தன்மையை அணி மிக வேகமாக இனங்கண்டு கொண்டது.

சமூகத்தின் நிதித் தேவைகளுக்கு ஏற்ப சேவைகளை வழங்குவதில் காண்பிக்கும் அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாட்டுடன், நிறுவனத்தின் இராகலை கிளை வெகுவேகமாக தங்கக் கடன் வணிகத்தில் முன்னணி வகிக்கும் செயல்பாட்டாளராக மாறியது.

உண்மையில், அணியின் மகத்தான முயற்சிகளின் விளைவாக, “ஏசியா அசெட்” என்ற நாமம் இராகலையில் தங்கக் கடன்களுக்கு பெயர்பெற்றதாக மாறியுள்ளது.



# அமானா வங்கி இடமாற்றம்

அமானா வங்கி அண்மையில் தனது கூட்டாண்மை வங்கியியல் அலுவலகத்தை இடமாற்றம் செய்துள்ளது.

புதிய வளாகத்தின் திறப்பு நிகழ்வில் அமானா வங்கியின் தவிசாளர் அஸ்கி அக்பராலி, முகாமைத்துவ பணிப்பாளர் ஃ பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர், பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் தில்ஷான் ஹெட்டியாரச்சி, திஷான் சுபசிங்க மற்றும் மொஹமட் ஆடமலி, வியாபார வங்கியியல் பிரிவின் உப தலைவர் இர்ஷாத் இக்பால், உதவி உப தலைவர் மற்றும் கூட்டாண்மை வங்கிப் பிரிவின் தலைமை அதிகாரி ரஜேந்திர ஜயசிங்க மற்றும் முகாமைத்துவ குழுவின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கொழும்பு 3, காலி வீதியில் அமைந்துள்ள, அமானா வங்கியின் பிரதான கிளையின் 5ஆம் மற்றும் 6ஆம் மாடிகளில் அமைந்துள்ள புதிய கூட்டாண்மை அலுவலகத்தினூடாக ஒப்பற்ற சௌகரியம் மற்றும் செயற்பாடுகள் போன்றன பிரதிபலிக்கப்பட்டுள்ளன.

பிரத்தியேகமான வங்கியியல் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வங்கியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், புதிய வளாகத்தில் மாநாட்டு அறைகள் மற்றும் பிரத்தியேக சந்திப்புப் பகுதிகள் போன்றன அமைந்துள்ளதுடன், இரகசியத்தன்மை வாய்ந்த கலந்துரையாடல்களை முன்னெடுக்க உதவும் வகையில் அமைந்துள்ளன.

# SDTI கேம்பஸிற்கு பொதுநலவாய தொழில்முயற்சி மேன்மை விருது

பொதுநலவாய தொழில்முயற்சி மேன்மை விருது விழாவில் SDTI கேம்பஸ்,“Outstanding Education Institute Award with Quality Education & Moral Standards”விருதை வென்றுள்ளது.

மேற்படி விருது விழா அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்றுள்ளது. பொதுநலவாய நாடுகள் மத்தியில் சர்வதேச நடுவர் குழுவொன்றினால் தெரிவு செய்யப்பட்ட ஆகச் சிறந்த நிறுவனங்கள் இதன்போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டன.

2022 ஆம் ஆண்டில் தெற்காசியாவின் சிறந்த பல்கலைக்கழகம் என்ற விருதை வென்றுள்ள SDTI கேம்பஸ் (www.sdticampus.lk) (0769998889) மூலம் சர்வதேச ஐளுழு தரச் சான்றிதழை கொண்டுள்ள சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் இணைந்தும் கல்வி அமைச்சின் கீழ் செயற்படுகின்ற திறன் அபிவிருத்தி நிதியத்துடன் இணைந்தும் உயர்கல்வி பாடநெறிகள், டிப்ளோமா, பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு, இளங்கலை பட்டம், முதுமானி மற்றும் கலாநிதி பட்டப்படிப்பு என பல்வேறு பாடநெறிகளை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் கற்க முடியும். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி பட்டப்படிப்பு பாடநெறிகளை குறைந்த கட்டணத்தில் அரச வங்கிகள் வழங்கும் கடன் வசதிகளை பெற்றும் தொழில் செய்தவாறும் கற்பதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.



நாடெங்கிலும் விரிந்துள்ள கிளை வலையமைப்பு ஊடாகவும் தொலைக்கல்வி முறை ஊடாகவும் பயிற்சி பெறுவதற்கு மாணவர்களுக்கு வசதி ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.

ஆலோசனை மனோதத்துவவியல், முகாமைத்துவம், வங்கியியல், வர்த்தக நிர்வாகம், ஆசிரியர், தாதியர், மருத்துவ இராசாயனவியல், பாமசி, தகவல் தொழில்நுட்பம், வடிவமைப்பு, பொறியியல், நாடக கலை மற்றும் அறிவிப்பாளர், மொழிகள் போன்ற பல்வேறு துறைகள் ஊடாக உயர்கல்வி பாடநெறிகளை கோட்பாட்டு ரீதியாகவும் செய்முறை ரீதியாகவும் கற்று உயர் தொழில் தகைமைகளை பூர்த்தி செய்துக்கொள்வதற்கு SDTI கேம்பஸ் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.



# தலதா பெரஹரவுடன் கைகோர்த்த மலிபன்

மலிபன், கண்டி தலதா பெரஹர 2023 இன் ஆன்மீக மற்றும் கலாச்சார மகத்துவத்திற்கு ஆதரவளித்துள்ளது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் கௌரவத்திற்குரிய நிகழ்வில், பல நூற்றாண்டுகளின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் கொண்டாடப்பட்டு வருகிறது.

கடந்த பல தசாப்தங்களாக, நல்லெண்ணத்தின் பல்வேறு சமிக்ஞைகள் மூலம் அனைத்து இலங்கை மக்களுக்கும் மகிழ்ச்சி மற்றும் ஒற்றுமையை வளர்ப்பதற்கான அதன் மனப்பூர்வமான அர்ப்பணிப்பு மற்றும் சமூகத்திற்கான அதன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவது என்பது மலிபனைப் பொறுத்தவரையில் ஒரு பெருமைக்குரிய பாரம்பரியமாக காணப்படுகின்றது.

மகத்துவம்மிக்க ஆன்மீக முக்கியத்துவத்துடன் இலங்கையின் வளமான கலாச்சார பாரம்பரியத்தின் அடையாளமான கண்டி தலதா பெரஹர, உலகம் முழுவதிலுமிருந்து ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் மற்றும் பார்வையாளர்களை ஈர்க்கிறது.

இதன் பின்னணியில், நிகழ்வில் மலிபனின் பிரசன்னமானது ஒரு ஆழமான அர்த்தத்தைப் பிரதிபலிக்கிறது. இது ஒரு பொறுப்பான நிறுவனமாக, உள்ளூர் மரபுகளைக் கட்டிக்காக்கும் ஒரு வலுவான கூட்டாளராகவும் மற்றும் இந்த தனித்துவமான கலாச்சார மற்றும் சமய திருவிழாவின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.



# FaBriEco அறிமுகம்

இலங்கையின் முன்னணி ஆடை உற்பத்தியாளர்களில் ஒருவரான Hayleys Fabric PLC, தொழில்துறை கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டுமானப் பொருட்களாக மாற்ற மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் Pro Green Laboratories உடன் கைகோர்த்துள்ளது.

குயடீசறைநுஉழ ஒத்துழைப்பின் நோக்கம், ஆடைத் தொழில்துறையின் துணை தயாரிப்புகளான கழிவாக அகற்றப்படும் சாயங்கள், கழிவாக வீசப்படும் துணிகள் மற்றும் புகையாக பறக்கும் சாம்பல் போன்ற உற்பத்திக் கழிவுகளைப் பயன்படுத்தி உள்ளூர் சந்தைக்கு மலிவு விலையில், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற தயாரிப்புகளை உருவாக்குவதாகும்.

இந்த முயற்சியானது Pro Green Laboratoriesன் பேராசிரியர் ரங்கிகா யூ ஹல்வத்துரவின் செயற்பாடுகளின் கீழ் நடத்திய ஆய்வின் அடிப்படையில் அமைந்ததுடன் மண் கொன்கிரீட் செங்கற்கள் மற்றும் பாலிமர் சுய-கச்சிதமான மண் செங்கற்கள் போன்ற நிலையான தயாரிப்புகளுக்கான காப்புரிமையை அவர் ஏற்கனவே பெற்றுள்ளார்.

“இந்தக் கூட்டாண்மை பசுமையான எதிர்காலத்தை உருவாக்க உதவும் என்று நாங்கள் நம்புகிறோம். Pro Green Laboratories உடன் எங்களின் நிலைத்தன்மை குழுவில் இணைவதன் மூலம், கழிவு நிர்வகிப்பு மற்றும் உற்பத்தியில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

இது ஒரு வட்டப் பொருளாதாரத்திற்கு வழிவகுக்கும்.” என Hayleys Fabric இன் முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஹான் குணதிலக்க தெரிவித்தார்.